# மடுள்ள பிரதேச சபை

## மொனராகலை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூலை 06 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூன் 23 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மடுள்ள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமா 37 காணித் துண்டுகளின் பெறுமதியினை ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவர் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த 6 காணித் துண்டுகளின் பெறுமதி மற்றும் 12 கட்டிடங்களின் பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவர் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியினை கணக்கீடு செய்யதிருக்கவில்லை.

1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

-----------------------------------------------

மடுள்ள பஸ் நிலையத்தில் கடைகள் தொடர்பாக மொனராகல மாவட்ட நீதிமன்றத்தில் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 1618 ஆம் இலக்க வழக்கு தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

1.3.3. இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

06 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,887,533 தொகையாகக் காணப்பட்டதுடன், துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 10,022,780 ஆக இருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 60,268,860 தொகைக்கான சொத்துக்கள் விடயங்கள் மற்றும் ரூபா 283,271 தொகைக்கான பொறுப்பு விடயங்களையும் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நி.பி. 71 | 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 கொண்ட பொது நிருவாக சுற்று நிருபத்தின் பிரகாரம் சபையில் அமைய, பிரதியீட்டு அடிப்படையில் கடமையாற்றிய சாரதிகள், இயந்திர இயக்குனர்கள், காவலாளிகள், சுகாதாரத் தொழிலாளர்கள், நூலகப் பொறுப்பாளர்கள், பாதைத் தொழிலாளர்கள் ஆகிய பதவிகளுக்காக 28 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விட வெளியே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2003 இன் 17 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1942 இன் 18 இலக்க அரசாங்க சேவை சேமலாப நிதி கட்டளைச் சட்டம் | ஓய்வூதியம் அற்ற தற்காலிக, மாதாநத சம்பளம் பெறும் ஊழியர்களிடம் நூற்றிற்கு 8 உம் சபையின் பங்களிப்பு நூற்றிற்கு 12 உம் ஆக அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை அனுப்பப்பட வேண்டும். மீளாய்வாண்டின் போது சபையினால் அமைய அடிப்படையில் கடமையாற்றிய சாரதி ஒருவருக்காக ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையாக 2015 ஜனவரி முதல் ஏப்ரல் வரை ரூபா 29,614 தொகை ஒன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

-----------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,262,414 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,728,319 தொகையாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 1,534,095 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

----------------------------------

#### 2.2.1 நிலுவை வருமானம்

------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 534,204 தொகையான நிலுவை வருமானம் அறவீடு செய்திருக்கவில்லை.

#### 2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

----------------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 689,420 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,422,823 தொகையையும் அறவீடு செய்திருக்கவில்லை.

#### 2.2.3 தொலைபேசி டவர் கட்டணம்

---------------------------------------------------

பல்வேறு தொலைபேசிக் கம்பனிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 6 செலுத்துகை டவர் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 152 ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த வரி ஒன்று மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3 மிகை விதிப்பு

------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு சொல்லவேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 32,697 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 9 பதவிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினரை மிகைத்து 34 ஊழியர்கள் மீளாய்வாண்டின் போது ஈடுபடுத்தி சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மின் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2(1) இன் பிரகாரம் வீதி விளக்குகள் செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கான கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள், வீதி விளக்குகளை செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலுக்காக சேவை வழங்குனர் ஒருவராகக் கடமையாற்ற வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 439,500 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2013 நவம்பர் 08 திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் 12/ஹா/05/கஸல பதுன் ஆம் இலக்கம கொண்ட கடிதத்தின் மூலம் 20 லீட்டர் அளவான 100 குப்பைப் பாத்திரங்கள் 2013 நவம்பர் 08 சபைக்கு வழங்கியிருந்த போதிலும் 2016 மே 06 திகதி அளவில் 93 பாத்திரங்கள் வினியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

3.2 ஒப்பந்த நிருவாகம்

-----------------------------

நேர்கூலி அடிப்படையில் சபையினால் ரூபா 1,256,981 தொகை செலவிடப்பட்டு 08 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக மதிப்பீடுகள், பண்டக் கிரயப் பகுப்பாய்வு மற்றும் முடிவுற்ற வேலை அறிக்கைகள் என்பன தயாரித்திருக்கவில்லை.

4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

--------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் மூலம் மதிப்பீட்டு வருமானம், செலவுகள் மற்றும் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம், செலவுகள் இடையே காணப்பட்ட முக்கியமான முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகள் கட்டுப்பாட்டின் போது பாதீடு ஆக்க பூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 சுற்றாடல் சார் மற்றும் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றல்

-----------------------------------------------------------------------------------------------------

அனைத்து அரச நிறுவனங்களும் தனது தூரநோக்கு மற்றும் பணியை நிறைவேற்றும் செயற்பாட்டில் அந்த நிறுவனத்திற்கு பொருத்தமான சுற்றாடல் சார் மற்றும் சமூக பொறுப்புக்களை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டிய போதிலும் சபையினால், அவர்களின் சுற்றாடல் சார் சமூகப் பொறுப்புக்களை இனங்காண்பதற்கான நடைமுறை ஒன்றினை தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை.

4.3 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------------

2009 ஜுன் 09 திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் DMA/2009(1) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டல் சுற்று நிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைப்பதற்காக மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்